செய்தி வெளியீடு எண் : 414 நாள்: 16.03.2022

## செய்தி வெளியீடு

## குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்கள் புனரமைப்பு வல்லுநர் குழு தனது அறிக்கையை மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு.மு.க. ஸ்டாலின் அவர்களிடம் அளித்தது

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. மு.க. ஸ்டாலின் அவர்களிடம் இன்று (16.03.2022) தலைமைச் செயலகத்தில், கொரோனா ஊரடங்கால் பாதிக்கப்பட்டு நலிவடைந்த குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்களை மீட்டுருவாக்கிட ஓய்வு பெற்ற இந்திய ஆட்சிப் பணி அலுவலர் முனைவர். திரு. என். சுந்தரதேவன் அவர்கள் தலைமையில் அமைக்கப்பட்ட "குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்களின் புனரமைப்பு வல்லுநர் குழு" தனது அறிக்கையினை அளித்தது.

இக்குழுவானது, குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்களின் பிரச்சினைகள் மற்றும் தேவையை அறிந்து கொள்ள, 16 தொழிற்துறை சங்கங்கள், 33 அரசுத் துறைகளைச் சார்ந்த அலுவலர்கள், வங்கி அதிகாரிகள், நிதி நிறுவனங்கள், புத்தொழில்கள் சார்ந்த வல்லுநர்கள் மற்றும் பல்துறை ஆலோசகர்கள் ஆகியோருடன் 60–க்கும் மேற்பட்ட கூட்டங்கள் நடத்தப்பட்டும், குழு உறுப்பினர்களுடன் விவாதித்தும், ஆலோசனைகள் செய்தும், குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்களின் முக்கிய பிரச்சனைகளுக்கான தீர்வுகள் மற்றும் பரிந்துரைகளுடன் தனது அறிக்கையை சமர்ப்பித்தது.

இந்நிகழ்வின்போது, மாண்புமிகு குறு சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்கள் துறை அமைச்சர் தா.மோ.அன்பரசன், தலைமைச் செயலாளர் முனைவர் வெ. இறையன்பு, இ.ஆ.ப, குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்கள் துறைச் செயலாளர் திரு. வி. அருண்ராய், இ.ஆ.ப, தொழில் ஆணையர் மற்றும் தொழில் வணிக இயக்குநர் திருமதி சிஜி தாமஸ் வைத்யன், இ.ஆ.ப, குழுவின் உறுப்பினர்கள் மற்றும் அரசு உயர் அலுவலர்கள் உடனிருந்தனர்.

…………

வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, சென்னை–9